**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை – 2015**
-----------------------------------------------------------------------------------------

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள், கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அறிக்கைகள் தாமதம் காரணமாக அதிகாரசபை தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை 2019 மார்ச் 08 ஆந் திகதி மும்மொழிகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2019 திசெம்பர் 13 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**
---------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**
------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி, அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கையின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஒக்தோபர் 07 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்களானவை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கி இணக்கக்கூற்று மற்றும் காசேட்டின் பிரகாரம் காசு மீதி ரூபா 628,560 ஆக இருந்த போதும் ஐந்தொகையில் காசு மீதியாக ரூபா 593,251 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அத் பிரகாரம் ரூபா 35,309 ஆல் காசு மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டின் பிரகாரம் பிரயாணச் செலவினம் மற்றும் இணைந்த படிகளுக்கான அட்டுறுச் செலவினம் ரூபா 4,550 ஆக இருந்த போதும் இறுதிக் கணக்குகளில் ரூபா 7,963 என காட்டப்பட்டமையால் ரூபா 3,413 தொகையால் அட்டுறு செலவினத்தின் கீழ் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பேரேட்டின் பிரகாரம் ஏனைய சேவைகளுக்கான செலவினம் ரூபா 331,429 ஆக இருந்த போதும் இறுதிக் கணக்குகளில் நிர்வாகச் செலவினத்தின் கீழ் அது ரூபா 367,229 என காட்டப்பட்டமையால் ரூபா 35,800 தொகையால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பேரேட்டின் பிரகாரம் கேள்வி கட்டணங்கள் ரூபா 84,000 ஆக இருந்த போதும் இறுதிக் கணக்குகளில் ஏனைய வருமானங்களின் கீழ் அப்பெறுமதி ரூபா 84,500 என காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டிற்காக தளபாட உபகரணங்கள் பெறுமானத்தேய்வு ரூபா 843,946 ஆக இருந்த போதும் அது இறுதிக் கணக்குகளில் ரூபா 1,419,386 என காண்பிக்கப்பட்டமையால் பெறுமானத்தேய்வு ரூபா 575,440 தொகையால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 சனவரி 01 இல் உள்ளவாறு தளபாட உபகரணங்கள் பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 2,014,614 ஆக இருக்க வேண்டிய போதும் அது ரூபா 1,845,755 என காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளின் பெறுமானத்தேய்வு ரூபா 168,859 ஆல் குறைவாக சீராக்கப்பட்டமை அதற்கான காரணமாக இருந்தது.

(எ) நிலையான சொத்துக்கள் பதிவேடுகளின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் தளபாட உபகரணங்கள் கொள்வனவு ரூபா 1,571,509 ஆக இருந்த போதும் பேரேட்டில் தளபாடங்கள் உபகரணக் கணக்கில் அது 1,533,674 ஆக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் தளபாட உகரணங்கள் கொள்வனவு ரூபா 1,571,509 ஆக இருந்த போதும் பேரேட்டில் தளபாடங்கள் உபகரணக் கணக்கில் அது 1,533,674 ஆக காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் தளபாட உகரணங்கள் கொள்வனவு ரூபா 2,283,401 ஆக இருந்த போதும் பேரேட்டில் தளபாடங்கள் உபகரணக் கணக்கில் அப்பெறுமதி 2,321,236 ஆக காட்டப்பட்டிருந்தது.

(ஒ) பேரேட்டில் தளபாட உபகரணங்கள் பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கு ரூபா 1,321,109 ஆக இருந்த நிதிக்கூற்றுக்களில் தளபாட உபகரணங்களின் பெறுமானத்தேய்வாக ரூபா 1,419,386 என காட்டப்பட்டிருந்தது.

(ஔ) தளபாட உபகரணங்களின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 477,163 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தமையால் விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள அரசின் மானியங்கள் பதிவழிப்பும் ரூபா 477,163 தொகையால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆம் ஆண்டில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 613,396 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,527,892 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,141,288 ஆன குறைவொன்று தென்பட்டது. மீளாய்வாண்டில் திறைசேரி மானியங்கள் ரூபா 4,691,928 ஆல் குறைவடைந்தமை அரசின் மானிய காலக்கழிவு ரூபா 1,317,790 ஆல் குறைவடைந்தமை மேற்படி பற்றாக்குறை அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) அதிகாரசபையின் கடந்த 05 ஆண்டுகளின் தேறிய மிகை / (பற்றாக்குறை) 2011 ஆம் ஆண்டில் ரூபா 507,711 தொகை, 2012 ஆம் ஆண்டு ரூபா (2,050,079) தொகை 2013 ஆம் ஆண்டில் ரூபா (521,069) தொகை, 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,527,892 தொகையும் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா (613,396) ஆக இருந்தன. இப்பெறுமதிக்கு ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்ட சம்பளங்கள் மற்றும் பெறுமானத் தேய்வு அளவினை மீண்டும் சீரக்கம் செய்த போது அனைத்து ஆண்டுகளிலும் தேறிய மிகையொன்று நிரூபணமானதுடன் அவை முறையே ரூபா 10,415,540 தொகை, ரூபா 11,783,227 தொகை, ரூபா 13,823,867 தொகை, ரூபா 19,486,750 தொகை மற்றும் ரூபா 17,084,600 ஆக இருந்தன.